பொது நிர்வாக சுற்றறிக்கை : 07/2026

எனது இலக்கம் : EST-1/CIRL/03/0001-(I)
பொது நிர்வாக,மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

2026.02.23

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதமச் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
பொதுக்கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைத் தலைவர்கள்

**"ரட்டம எகட்ட தேசிய செயற்பாட்டிற்கு" இணைந்த வகையில் விஷ போதைப்பொருட்களை தடுப்பதற்கான வாரத்தினை நடைமுறைப்படுத்தல்**

விஷ போதைப்பொருளை முற்றாக ஒழிப்புக்கான "ரட்டம எகட்ட தேசிய செயல்பாடு" தொடர்பில் வெளியிடப்பட்ட 2025.11.26 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 29/2025 தொடர்பில் அவதானத்தை ஈர்க்கின்றேன்.

02. முழுச் சமூகத்திலும் விஷ போதைப்பொருள் பயன்பாட்டினால் ஏற்பட்டுள்ள அழிவுகரமான தாக்கங்களைக் கருத்திற்கொண்டு, "ரட்டம எகட்ட" தேசிய செயற்பாட்டிற்கு இணைந்த வகையில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் விஷ போதைப்பொருள் ஒழிப்புத் நிகழ்ச்சித்திட்டங்களின் அங்குரார்ப்பணத்தைக் குறிக்கும் வகையில், 2026 மார்ச் 01 ஆம் திகதி ஆரம்பமாகும் வாரத்தை **"விஷ போதைப்பொருள் ஒழிப்பு வாரம்"** எனப் பிரகடனப்படுத்த ரட்டம எகட்ட தேசிய செயற்பாட்டுச் சபை தீர்மானித்துள்ளது.

03. விஷ போதைப்பொருள் ஒழிப்பு வாரத்திற்குள் பின்வரும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக அவதானம் செலுத்தப்படல் வேண்டும்.

3.1 விஷ போதைப்பொருள் விற்பனை மற்றும் விநியோகத்தைக் கட்டுப்படுத்தி அடக்குதல்

3.2 விஷ போதைப்பொருள் பயன்பாட்டிற்கு அடிமையானவர்களை அவ் அழிவுகரமான பழக்கத்திலிருந்து விடுவித்து, புனர்வாழ்விற்காக ஆற்றுப்படுத்துதல்

04. மேற்படி 03 இலுள்ள நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக, இவ் வாரத்தினுள் ஒவ்வொரு அமைச்சினதும் ஒவ்வொரு திணைக்களத்தினதும், ஒவ்வொரு தாபனத்தினதும் அதேபோன்று ஒவ்வொரு கூட்டுத்தாபனத்தினதும் மற்றும் நியதிச்சட்ட சபையினதும் உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் பின்வரும் வேலைத்திட்டங்களைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவது எதிர்பார்க்கப்படுகின்றது.

4.1 பணியாட்தொகுதி, சிவில் சமூகம் மற்றும் பாடசாலை பிள்ளைகளை விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டங்கள்

4.2 விஷ போதைப்பொருள் ஒழிப்புத் தொடர்பாகப் பரந்த சமூகக் கலந்துரையாடலை உருவாக்கக்கூடிய விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள்

4.3 உத்தியோகத்தர்கள் மற்றும் சமூகத்தை ஒன்றிணைத்து முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள்

4.4 பஸ் வண்டிகள், முச்சக்கர வண்டிகள் மற்றும் பாடசாலை மாணவர் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுள்ள வாகனங்களை ஒன்றிணைத்து பல்வேறு விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள்

4.5 சந்தர்ப்பத்திற்கும் மற்றும் பிரதேசத்திற்கும் பொருத்தமான, அதேபோன்று கருப்பொருளுக்கு உரிய அடையாளம் காணப்பட்ட வேறு வேலைத்திட்டங்கள்

05. விஷ போதைப்பொருள் பயன்பாட்டிற்குத் தூண்டக்கூடிய அனைத்து வகையான போக்குகளையும் தோல்வியுறச் செய்து, இலங்கையிலிருந்து விஷ போதைப்பொருள் பயன்பாட்டினை வேரோடு ஒழிப்பதற்குப் பங்களிக்கக்கூடிய வகையிலான திட்டமிட்ட வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி, "**விஷ போதைப்பொருள் ஒழிப்பு வாரத்தை**" வெற்றிகரமாக்கிக் கொள்வதற்குத் தேவையான பங்களிப்பினை வழங்குமாறும் மேலும் அறிவிக்கின்றேன்.

ஒப்பம்./ எஸ்.ஆலோகபண்டார

செயலாளர்

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்

உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி : 0112662340
தொலைநகல் : 0112692158
மின்னஞ்சல் முகவரி : ad-1-est@pubad.gov.lk